www.Padasalai.Net www.CBSEtips.in

A

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

நேரம்: 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க:
அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்
i) அ, ஆ ii) அ, ஈ iii) ஆ, ஈ iv) அ, இ

2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க:

| | | | |
|---|---|---|---|
| 1) வெள்ளிவீதியார் | - | அ) | புறநானூறு |
| 2) அண்ணாமலையார் | - | ஆ) | சி.சு. செல்லப்பா |
| 3) வாடிவாசல் | - | இ) | குறுந்தொகை |
| 4) இளம்பெருவழுதி | - | ஈ) | காவடிச்சிந்து |

i) அ, ஆ, இ, ஈ ii) ஆ, ஈ, அ, இ iii) இ, ஈ, ஆ, அ iv) இ, ஈ, அ, ஆ

3. கூற்று - "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்
விளக்கம் - கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை, கோட்டை என்னும் பொருள்களும் உண்டு
அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

4. ஒப்புரவு என்பதன் பொருள் ..............
அ) அடக்கமுடையது ஆ) பண்புடையது
இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

5. ஒட்டுப் போடாத
ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்றேதான் - இக்கவிதையில் பயின்று வருவது
அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

6. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

7. 1999 இல் இலங்கை அரசின் சாகித்தியப் பரிசு பெற்ற முத்துலிங்கத்தின் சிறுகதைத் தொகுப்பு எது?
அ) வம்ச விருத்தி ஆ) ஆறாம் திணை இ) வடக்குவீதி ஈ) ஆறுமணிக் குருவி

8. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு
அ) உரிச்சொல் தொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்
இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

9. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது
அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

10. Document என்பதன் கலைச்சொல்
அ) ஆவணம் ஆ) ஒப்பந்தம் இ) ஏடு ஈ) இவை அனைத்தும்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



11. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க:



அ) வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை

ஆ) இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

இ) உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும் தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

12. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

13. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சாரியை
இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி

14. "ஒற்றை வைக்கோல் புரட்சி" என்னும் நூலை எழுதியவர் யார்?
அ) கவிஞர் மல்லார்மே ஆ) மலையாளக் கவி ஆற்றூர்ரவிவர்மா
இ) மசானபுஃபுகோகா ஈ) வால்ட் விட்மன்

www.Padasalai.Net

## பகுதி - II

*பிரிவு - 1*

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3×2=6

15. என் அம்மை, ஒற்றியெடுத்த
நெற்றிமண் அழகே!
வழிவழி நினதடி தொழுதவர்
உழுதவர், விதைத்தவர்
வியர்த்தவர்க்கெல்லாம்
நிறைமணி தந்தவளே! - இக்கவிதை அடிகளில் உள்ள வினையாலணையும் பெயர்களை எழுதுக.

16. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?

17. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு கோடையில் கொட்டும் பூக்களை எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?

18. "ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன்எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்" - இப்பாடலடிகளில் ஒளிரக் காய்ந்தது எது? பழுத்தது எது?

*பிரிவு - 2*

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** 2×2=4

19. உ.வே.சா அவர்கள் பயின்ற கல்வி முறை குறித்துக் குறிப்பு வரைக?

20. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

21. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



பிரிவு - 3

குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு விடை தருக: 7×2=14

22. *தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:*
அ) கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்.

23. *மயங்கொலிச் சொற்களின் பொருளறிந்து சொற்றொடர் அமைக்கவும்:*
உலை, உளை, உழை

24. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:*
அனைத்துத் துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசு பணியை பெற வேண்டும்

25. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:*
அ) மலிந்த ஆ) முனிவிலர்

26. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:*
அ) அருவினை ஆ) மனையென

27. *புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக:*
(மதி, இதழ், கம்பு, வளை, சினை, ஆழி)
அ) எலியும் நுழையும் : எழிலரசி கையும் நுழையும் .................
ஆ) வண்டியையும் இயக்கும் : பெரும் கப்பலையும் தாங்கும் .................

28. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:*
அ) பிண்ணாக்கு ஆ) வைகை

29. *கலைச்சொல்லாக்கம் தருக:*
அ) Journalist ஆ) Classical Language

30. ஈரசைச் சீர்களுக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை?

பகுதி - III

பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

31. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றை குறிப்பிடுகிறார்?
32. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.
33. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?
34. "சலச வாவியில் செங்கயல் பாயும்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

பிரிவு - 2

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

35. சமணப் பள்ளிகளும், பெண்கல்வியும் - குறிப்பு வரைக.
36. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.
37. மொழி முதல், இறுதி எழுத்துக்கள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக.
38. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×4=12

39. வேற்றுமை அணி (அல்லது)
இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து - இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

40. பொதுவியல் திணையை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (அல்லது)
மகள்நிலை உரைத்தல் துறையை சான்றுடன் விளக்குக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

41. பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினை எழுதுக.


பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யாற்றிடும் காணீர்

- பாரதியார்

42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக:

தன் கையே தனக்குதவி **(அல்லது)** யானைக்கும் அடிசறுக்கும்.

43. கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக:




## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கும் மிகாமல் விடையளிக்கவும்:** **3×6=18**

44. அ) 'அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்' - இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.

**(அல்லது)**

ஆ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

45. அ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

**(அல்லது)**

ஆ) பௌத்தக் கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.

46. அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. **(அல்லது)**

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி - V

**குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

47. அ) **"உண்டால் அம்ம ..........."** எனத் தொடங்கும் புறநானூற்றுப்பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) **'செயல்'** என்று முடியும் குறட்பாவை எழுதுக.

-----------

Kindly send me your study materials to padasalai.net@gmail.com